குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்
முன்னிலை: – திரு. ச.ஷர்மிளா., பி.ஏ.பி.எல்.(Hons)எல்.எல்.எம்.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

முதல் விசாரணை வழக்கு எண். 13/2026

அரசுக்காக –
காவல் ஆய்வாளர்,
தீவட்டிப்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண்.616/2025,
சட்டப்பிரிவு. 103 BNS 2023. ...குற்றமுறையீட்டாளர்

//எதிராக//

1. திரு.மோகன் த/பெ.மாணிக்கம்,
கதவு எண்.3/114,
காருவள்ளி,
மரகோட்டை கிராமம்,
காடையம்பட்டி வட்டம்,
சேலம் மாவட்டம். ....எதிரி

இவ்வழக்கு கடந்த 03.02.2026 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தனக்காக ஆஜராகியும் இருதரப்பு கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**உத்தரவு**

1. இவ்வழக்கின் வாதியும் சாட்சியுமான குணா என்பவர் குற்றம்சாட்டப்பட்ட எதிரி மோகன் என்பவரின் இளைய மகன் ஆவார். இவ்வழக்கில் இறந்துபோன மாணிக்கம் என்பவருக்கு எதிரி மோகன் என்பவர் மகன் ஆவார். இவ்வழக்கில் இறந்துபோன மாணிக்கம் என்பவர் காருவள்ளி, கடசா முட்டுக்கொட்டாயில் உள்ள அவருக்கு சொந்தமான நிலத்தில் உள்ள வீட்டில் குடியிருந்தும் கொண்டும், சாட்சி – 6 ராதாவின் குடும்பத்தார் பராமரிப்பில் இருந்து வந்துள்ளார்.

2. குற்றம்சாட்டப்பட்ட எதிரி மோகன் என்பவர் அடிக்கடி மது அருந்தி விட்டு வந்து சாட்சி–6 ராதா மற்றும் இவ்வழக்கில் இறந்துபோன மாணிக்கம் இருவரிடமும்


S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:54:37 +0530

"என்னை யாரும் மதிப்பதில்லை" என்றும் "இதுவரை எனக்கு என்ன செய்துள்ளாய்" என்று கேட்டு அடிக்கடி பிரச்சனை செய்து இறந்துபோன மாணிக்கம் என்பவரை அடித்து வந்துள்ளார். எதிரி மோகன் என்பவரின் மனைவி சாட்சி–6 ராதா என்பவர் 3 சிந்து மாட்டு கன்றுக்குட்டிகளை வாங்கி தனது மாமனாரான இறந்துபோன மாணிக்கம் என்பவர் குடியிருந்த வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மாட்டுக்கொட்டாயில் கட்டி பாராமரித்து வந்துள்ளார். எதிரி மோகன் என்பவர் அதில் 2 கன்று குட்டிகளை விற்று அந்த பணத்தில் மது அருந்தி செலவு செய்துள்ளார். மேற்படி ஒரு கன்றுக்குட்டியை சாட்சி–6 ராதா என்பவர் லோன் கட்ட பணம் வேண்டும் என்பதால் அதற்காக விற்றுள்ளார்.

3. இந்நிலையில் 17.12.2025 ம் தேதி மாலை சுமார் 6.30 மணிக்கு எதிரி மோகன் என்பவர் குடிபோதையில் காருவள்ளி, கடசா முட்டுக்கொட்டாயில் உள்ள இறந்துபோன மாணிக்கத்தின் வீட்டிற்கு வந்து அவரிடம் "எங்க கன்றுக்குட்டியை காணோம்" என்று கேட்டு தகராறு செய்து செய்கின்ற செயலால் மரணம் நிகழும் என்று தெரிந்து இறந்துபோன மாணிக்கத்தை பிடித்து கீழே தள்ளியதில் அவர் அருகில் இருந்த நாவல் பழ மரத்தின் மீது பலமாக மோதி கீழே இருந்த கல்லின் மீது விழுந்ததில், இடது பக்க முன் தலை, இடது கண், இடது பக்க கீழ் தாடை, இடது தோள்பட்டை, இடது முழங்கை, இடது முன்கை, வலது பக்க கீழ் உதடு, வலது முன் கை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டுள்ளது.

4. மேற்படி சாட்சி–1 குணா என்பவர் எதிரி மோகன் என்பவரை பார்த்து "எதுக்கு இப்படி பண்ணிட்டு திரியர" என்று கேட்க எதிரி மோகன் என்பவர் "நீ யாருடா என்ன கேட்க" என்று கேட்டு பால் கரக்கும் பாத்திரத்தை எடுத்து சாட்சி–6 குணாவை அடிக்க முயற்சி செய்துள்ளார். அருகில் இருந்த சாட்சிகள் இவ்வழக்கில் இறந்துபோன மாணிக்கத்தின் நிலை குறித்து 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லிவிட்டு மேற்படி மாணிக்கத்தை கட்டிலில் படுக்க வைத்தபோது எதிரி மோகன் என்பவர் அவர் மீது பெட்ரோலை ஊற்றி கொலை முயற்சி செய்துள்ளார். மேற்படி மாணிக்கத்தை ஆம்புலன்ஸ் மூலம் ஓமலூர் அரசு



S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:54:41 +0530

மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் இறந்துள்ளார்.

5. மாணிக்கத்தின் பிரேத பரிசோதனை அறிக்கையை பரிசீலித்தில், அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தாலும், அதிர்ச்சியாலும் இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கு புலன் விசாரணை முடிந்து பின்பு எதிரி மோகன் என்பவருக்கு இறந்துபோன மாணிக்கத்தை கொலை செய்யும் எண்ணம் இல்லை என்றும், ஆனால் தான் செய்கின்ற செயலால் மரணம் விளைவிக்க கூடும் என்று அறிந்தே குற்றத்தை செய்துள்ளார் என்று குறிப்பிட்டு 105 BNS 2023 (Culpable Homicide not Amounting to Murder) ஆக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

6. இவ்வழக்கு கோப்புகளை பரிசீலித்தில், எதிரி மோகன் சம்பவத்தின் போதும், குற்றச் செயலை செய்யும்போதும் தன்னிச்சையாக மது அருந்தி போதையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரி எதிரிக்கு கொலை செய்யும் நோக்கம் இல்லை, ஆனால் தனது செயலின் விளைவுகளை அவர் அறிந்திருந்தார் என்று கருதி அவர் மீது 105 BNS ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பது ஏற்றுகொள்ளதக்கதல்ல எதிரிக்கு கொலை செய்யும் நோக்கம் இறுந்ததா என்றும், அவர் செயல்களின் விளைவுகளை அறிந்திருந்தார் என்றும், வழக்கு விசாரணையின் போது தான் தீர்மானிக்க முடியும் ஆகையால் இந்நீதிமன்றம் இவ்வழக்கை பிரிவு 103 BNS 2023 ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பானை அனுப்பட்டது.

7. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS பிரிவு 230-ன் படி 06.03.2026-ம் தேதி கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

8. இவ்வழக்கில் கண்ட குற்றமானது சேலம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக இருப்பதால் இவ்வழக்கினை BNSS பிரிவு 232(a) ன் படி கீழ் சேலம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்தனுப்ப வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. எதிரி சேலம் மாண்புமிகு அமர்வு



S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:54:46 +0530

நீதிமன்றத்திற்கு 06.04.2026ம் தேதி வழக்கு வாய்தா தேதியில் ஆஜராக வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

9. எதிரி பிணையில் இருந்து வருவதால் அவர்கள் மேல் விசாரணையின் போதும், அது முடியும் வரையிலும் BNSS பிரிவு 232(b) ன் படி தொடர்ந்து பிணையில் இருந்து வரவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

10. இவ்வழக்கின் பதிவுக்கட்டையும், சாட்சியத்தில் தாக்கல் செய்யப்பபட பத்திரங்கள் உருப்படிகள் மற்றும் வழக்கு சொத்துக்கள் அனைத்தையும் BNSS பிரிவு 232(c) ன் படி சேலம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

11. இவ்வழக்கினை சேலம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதை குறித்து சேலம் மாவட்ட அமர்வு நீதிமன்ற அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு BNSS பிரிவு 232(d) ன் படி கீழ் அறிவிப்பு அனுப்பி வைக்கவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

12. எதிரி சேலம் மாவட்ட அமர்வு நீதிமன்ற விசாரணையின் போது அவர் தரப்பில் வழக்கறிஞர் வைத்து வாதாட தனக்கு வசதி உண்டு என்று கூறினார்.

13. இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிப்பார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் 06 ஆம் வெள்ளிக்கிழமை நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:54:51 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| 1. சம்பவம் நடந்த நாள் | – 17.12.2025 |
| 2. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நாள் | – 17.12.2025 |
| 3. எதிரி முன்னிலையான நாள் | – 06.03.2026 |
| 4. குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்த நாள் | – 21.01.2026 |

5. வழக்கு கோப்பில் எடுக்கப்பட்ட நாள் – 04.03.2026
6. எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் – 19.12.2025
7. எதிரி பிணையில் வெளிவந்த நாள் – 05.03.2026
8. குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் – 06.03.2026
9. உத்தரவு பகரப்பட்ட நாள் – 06.03.2026

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:54:56 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.

<u>பெறுதல்</u>

மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

<u>நகல்</u>

1. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், சேலம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. அரசு குற்றத்துறை வழக்கறிஞர் மாவட்ட அமர்வு நீதிமன்றம், சேலம்

NOTICE TO COMMITMENT BY JUDICIAL MAGISTRATE TO PUBLIC PROSECUTOR, SALEM.

(Sec. 232 BNSS)

P.R.C. No. 13/2026

(Cr.No.616/2025, Deevattipatti P.S.)

Tmt.S.Sharmila, B.A.B.L(Hons) L.L.M., Judicial Magistrate, Omalur hereby gives notice that the case in P.R.C. No. 13/2026 in respect of accused A1.Mohan S/o.Manickam, D.No.3/114, Karuvalli Po, Marakotai Village, Kadaiyampatti Tk, Salem Dt. is committed to the Hon'ble Sessions Court, Salem and it is further instructed to the Public Prosecutor, to conduct the prosecution of the said case. The accused is directed to appear before the concerned court on. 06.04.2026

The charges against the accused is that he had committed an offence punishable u/s.103 BNS 2023.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:55:03 +0530

Judicial Magistrate,
Omalur.

To:
The Public Prosecutor, Salem.
Copy submitted to :

1.The Hon'ble Principal District and Sessions Judge, Salem.
2.The Hon'ble Chief Judicial Magistrate, Salem.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, OMALUR.

DIARY EXTRACT

PRC.No.13/2026 on the file of this Court, Deevattipatti P.S. Cr. No.616/2025, u/s.103 BNS 2023.

| | |
|---|---|
| 04.03.2026 | The final report has been filed by the Investigating Officer against the accused Mohan S/o. Manickam for the offence under Section 105 of the Bharatiya Nyaya Sanhita, 2023 in Crime No. 616/2025 of Devattipatti Police Station. The prosecution case, in brief, is that the accused's wife had purchased three cows for the purpose of her livelihood and kept them in a shed situated adjacent to the house of the accused's father, the deceased Manickam. It is alleged that the accused had sold two of the cows to meet his alcohol expenses. Thereafter, the accused's wife sold the remaining cow to repay her debts. Upon coming to know that the other cow was missing and being unable to meet his expenses for alcohol, the accused allegedly questioned the deceased regarding the same, which resulted in a quarrel between them. On 17.12.2025, the accused is said to have gone to the house of the deceased under the influence of alcohol and pushed him. Consequently, the deceased Manickam fell against a nearby tree and sustained injuries on his head. When the persons in the vicinity attempted to rescue the deceased, the accused allegedly chased them away and poured petrol on the deceased. Thereafter, the victim was rescued and admitted to the hospital, where he was declared dead due to head injuries. The Investigating Officer has stated that the accused did not have the intention to commit murder, though he had knowledge of the consequences of his act, and therefore laid the final report for the offence under Section 105 of the Bharatiya Nyaya Sanhita, 2023. However, on perusal of the materials available on record, this Court is of the considered view that the intention of the accused can be determined only upon appreciation of evidence during trial, and it would be premature to determine the same at the stage of taking cognizance. Further, the accused is alleged to have been under voluntary intoxication at the time of the occurrence, and therefore the protection of general exceptions under the Bharatiya Nyaya Sanhita, 2023 is not applicable. On perusal of the complaint, FIR, statements of witnesses recorded under Section 180 of the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023, observation mahazar, rough sketch, confession statement, seizure mahazar, Form-91, accident register of the victim, inquest report, post-mortem report, and chemical examination report, this Court finds that a prima facie case is made out against the accused for the offence under Section 103(1) of the |



S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:55:08 +0530

| | |
|---|---|
| | Bharatiya Nyaya Sanhita, 2023. Considering the materials available on record, this Court takes cognizance of the offence under Section 103(1) of the Bharatiya Nyaya Sanhita, 2023. Since the offence is exclusively triable by the Court of Session, issue summons to the accused Mohan S/o. Manickam under Section 227 of the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 for the offence under Section 103(1) of the Bharatiya Nyaya Sanhita, 2023. Call on 06.03.2026. |
| 06.03.2026 | Accused present. Copy of served summon and Adhar of accused produced. Free copies furnished u/s.230 BNSS. The accused is charged with offence u/s.103 BNS. The offence is exclusively triable by court of session. Hence this case is committed to the Hon'ble Principal District and Sessions Court, Salem u/s.232 BNS. The accused is directed to appear before the court on 06.04.2026. Case records shall be duly indexed and forwarded. Detailed Order annexed. |

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:55:12 +0530

Judicial Magistrate,
Omalur.